# குடந்தைவாழ் கவிஞர்கள்!......

அறிமுகப் படுத்தி மகிழ்விப்பவர்,
திரு க. ஜெயக்குமார், குடந்தை

குடந்தை வாழ், புலவர்கள், கவிஞர்கள் சிலரை, என் அன்பிற்கினிய கெழுதகை உறவினர் அண்ணன், க. ஜெயக்குமார் அவர்கள் அறிமுகம் செய்திட, அவர்கள், தடாகம் எனும் இலக்கிய அவையாகிய புலனம்(Whatsapp) குழுமத்தில் இணைக்கப் பட்டு, நாள் தோறும், கவிதைகளை பகிர்ந்து வருகின்றனர். புலவர் திரு சோ.மோகன் அவர்கள், வெண்பா வேந்தர். நாள் தோறும், வெவ்வேறு, தலைப்பிலும், தொடர்ச்சியாகவும் வெண்பா பகிர்ந்து வருகிறார். அடுத்து திரு செல்லதுரை, எல்லா வகையான பாக்களையும் எழுதி மகிழ்கிறார். இவற்றுடன், தான் சுவைத்தனவற்றையும் பகிரத் தவறுவதில்லை! இவர் ஆசிரியப் பணி ஆற்றி வருகிறார். அடுத்து திரு குஞ்சித சுகுமார். ஆகியரவார். இவர்தம் படைப்புகளோடு, இவர் பகிர்த படைப்புகளும் இங்கு உண்டு.

**2088.சிந்தனைச் சிந்தியல் வெண்பா**
நாற்பொருளாயிரம்
**390/1000 _ இன்பம்_ ஐம்புலன் மகிழ்வு .**
**12.12.2022**

திட்டியும் கொட்டியும்
  தீண்டிடும் இன்பமது
வட்டியும் முதலுமாய்
   வந்திடும் கூடலிலே
கட்டிக் கரும்பாய்க்
   களிப்பு

சோ.மோகன் குடந்தை

2075.சிந்தனைச் சிந்தியல்
வெண்பா __நாற்பொருளாயிரம்
383/1000 _ இன்பம்_ ஐம்புலன்
மகிழ்வு . 05.12.2022

கண்களால் கவ்விடும்
   காதல் வேட்கையைக்
கண்ணாடி போல்நெஞ்சம்
   கண்காணி ஆகியே
கண்புதைத்துக் கையிடையில்
   கண்டு

சோ.மோகன் குடந்தை

**2099.வீடுபெற நில்** 17.12.2022

கூடு தனைவிடுத்துக் கொண்டவுயிர் சென்றிடுங்கால்
வீடு தமதாமோ? வெற்றுடலும் சீராமோ?
சூடும் நெறியில் சுடராய்ப் பிறர்க்கீந்து
வீடு பெறுவாய் விரைந்து!

**சோ.மோகன் குடந்தை**

**2100.வித்தை விரும்பு** 20.12.2022

அன்றன்றும் உந்தன் அறிவுப் பசியாற்ற
சென்றெங்கும் கண்டுச் சிகரமாம் ஆயகலை
நன்றென்று கற்றல் நலம்பயக்கும் என்றறிந்து
வென்றிட நீயும் விரும்பு

**சோ.மோகன் குடந்தை**

**பாரதீ!**

பாரதிரப் பாடியோனே!
பார்போற்ற உழைத்தவனே!
பாங்காய்தேசம்
நேசித்தவனே!
பாரதியே வணக்கங்கள்!

எங்கள் கவிகளுக்கு
ஏணியாய் இருப்பவனே!
ஏந்திழைக்காய்
ஒலித்தவனே!
ஏற்றந்தந்திட்ட கடவுளே!

உந்தன் கவியால்
உயர்ந்தது இந்தியா!
உந்தன் கனவுகள்
உருப்பெற்றது இன்று!
உச்சிவான் இடிந்து
உருக்குலைத்த போதும்
உறுதியாய் நிற்க
உணர்த்தியது உன்கவி!

உந்தன் சொல் புதிது
உணர்த்திய பொருள் புதிது
உணர்ச்சி வயலில்
நீவிதைத்த
உன்னத கவிநெல் புதிது

உருக்குலைந்த உள்ளங்கள்
உன்கவி நெருப்பால்
உருமாறி உணர்ந்தது
உன்னத விடுதலையை!

நாங்கள் தடுமாறும்போது
நலந்தரும் ஊன்றுகோலாய்
அடைக்கலப் புறாக்களுக்கு
சிபியின் துலாக்கோலாய்
எங்கள் இரும்புக்கவியைப்
பொன்னாக்குவதில்,
மந்திரக்கோலாய்
உன் எழுதுகோலுக்குதான்
எத்தனை அவதாரங்கள்!

சொற்கள்உம்மிடம்
சுமங்கலி ஆயின
கவிதை உம்மிடம்
கவுரவம் பெற்றது
தமிழ் உம்மிடம்
தன்மானம் பெற்றது
நாமோ உம்மிடம்
நன்மையேப் பெற்றோம்!

எனவே உன் பிறந்தநாளில்
உன்னை வாழ்த்துகின்றோம்
உன்னை வணங்குகின்றோம்
உன்வழி நடக்கின்றோம்!

இவண்
குஞ்சித. சுகுமார்

## 2087.தேனாய் வழியும்,

## மகாகவியின்

## பிறந்தநாள் 11.12.2022

(விருத்தப் பா)

(விளம் மா காய் மா விளம் விளம் காய்)
எழுசீர் கழிநெடிலடி

1
பாரதித் தேனாய்ப்
பாத்தொடுத்தே நம்மை
பண்புடை மக்களாய்
ஆக்குவித்தே

வேரதில் வீரம் கூட்டுவித்தே
வெற்றி கண்டிட
வாழ்வினைக்
காட்டுவித்தே

சாரதி ஆகி சட்டத்தைக் கூறி
சங்கடம் ஓட்டிட
சந்ததிக்கே

சீரதாம் வெற்றி சேர்த்திட்டு
நம்மை செண்பக மாகவே
பூக்கவைத்தார்

2
பெண்களும் தம்மின்
பேதமையை விட்டு
பங்கமில் வாழ்வினைக்
கண்டுயர

கண்களாய் வென்று
கல்விதனைக் கற்று
மாட்சிமைக் கண்டிட
சாட்சியானார்

கொண்டரும் வேட்கைக்
கட்டடையா நின்று
சுதந்திரக் காற்றினைத்
தூண்டிவிட்டார்

தொண்டராய் வந்து
தீதறுத்தே மக்கள்

நெஞ்சினில் தஞ்சமாய்
நின்றுயந்தார்

3
பல்வகைப் பாக்கள்
பாடிநம்மை நாட்டின்
பாதக அந்நியர்
தீயுரைத்து

சொல்வகைக் கூட்டி
சோர்வகற்றி வஞ்சம்
சோதனை ஈதென
நோயுரைத்தார்

வல்வினை என்று
வாழ்ந்திடும் மக்கள்
வஞ்சகம் தந்திடும்
ஆங்கிலேயர்

வில்லென மக்கள்
வேய்ந்திட்ட சொற்போர்
விண்ணுயர் கேட்கவே
ஓடவிட்டார்

4
மக்களின் உள்ளம்
மாறுபடும் வண்ணம்
மண்புகழ் ஒற்றுமை
சேர்ந்திடவே

தக்கதோர் வேட்கை
தெண்டனிட்டு வந்து
தன்துயர் தீர்க்கவே
ஒன்றிணைத்தார்

சிக்கலும் வந்து
சேர்ந்திடவேத் தீயோர்
விட்டுதன் நாட்டிடைச்
சென்றொழிந்தார்

அக்கவி தன்னின்
ஆன்றபுகழ் என்றும்
கெட்டிடாக் கட்டினைப்
போற்றிடுவோம்

**சோ.மோகன் குடந்தை**

---

தமிழ் கவிதைப் பூங்காப் போட்டி - 8

## இழிவு ! (இளிவரல்)

இழிவு என்பது,
கழிவின் எச்சம்!
பிழிவின் மிச்சம்!
அழிவின் உச்சம்!

மூப்பின் ஆக்கமும்;
பிணியின் தாக்கமும்,
வருத்தத்தின் வீக்கமும்;
வலியின்மையின் ஏக்கமும்,
வரிந்து கட்டித் தாக்குவது,
வருத்தம் தரும் இழிவாகும்!

தன்னொளி தளர்ந்தாலும்;
கண்ணொளிக் கலங்கினாலும்;
பற்கள் பதறினாலும்;
சொற்கள் சொதப்பினாலும்,
ஏளனம் இணைந்து,
ஏகடியம் செய்யும் இழிவாகும்!

கனிகள் கசந்தாலும்;
தீனிகள் திகட்டினாலும்;
பணிகள் பளுவானாலும்;
ஞானியாக மாறினாலும்;
பிணிகள் பற்றி வந்த,
கனிவற்ற இழிவாகும்!

முயற்சிகள் முறிந்தாலும்;
உயர்ச்சிகள் உடைந்தாலும்;
தளர்ச்சிகள் தாக்கினாலும்;
பெயர்ச்சிகள் வருத்தினாலும்,
அயர்ச்சி தருவது இழிவாகும்!

பிரிவு உறுத்தினாலும்,
பரிவுப் பரிதவித்தாலும்,
அறிவு அறிவுறுத்தினாலும்,
செறிவுச் செயல் இழந்தாலும்,
முடிந்தும் முடியாத;
வலியின்மை இழிவு,
வருத்தும் இழிவாகும்!
எனவே,
இழிவற்ற வாழ்வைப்
பழியற்ற வாழ்வைக்
குழிபறிக்கா வாழ்வை
விழியேற்க வேண்டுவோமே!

ஆக்கம்:- **புலவர். கு. சுகுமார்**
திருநாகேஸ்வரம்
அலைபேசி எண்- 9442903317.

## ஓய்வூதியர் தினம்!

17-12-2022

தேய்வான உடலுறுப்பால்
நோய்யான உடலுற்றுச்
சாய்ந்திட்ட அரசூழியருக்கு
ஓய்வூதியம் வரப்பிரசாதமே!

சுறுசுறுப்பாய் உழைத்தவனைப்
பரபரப்பாய் அலைந்தவனைக்
கிறுகிறுப்பான வயதேறி
விறுவிறுப்பாய் விரட்டிடுகின்றது!

ஓய்வூதியம் வருவதால்
ஓய்கின்றது சண்டைகள்
ஓய்கின்றது வாய்கள்
ஓய்கின்றது நோய்களும்!

தன்னம்பிக்கை தளிர்க்கின்றது
நன்னம்பிக்கை நயக்கின்றது
தன்வாழ்வு தழைக்கின்றது
பின்வாழ்வு பிரகாசிக்கின்றது!

பணவாழ்வே பிணவாழ்வை
இனவாழ்வாய் இணைத்துக்
குணவாழ்வாய்க் கூடவைத்துத்
தினவாழ்வாய்த் திகழ்கின்றது!

ஓய்வூதியம் ஒன்றே
பேய்வாழ்வை நாய்வாழ்வைச்
சேயாய் எண்ணவைத்துத்
தாய்யாய்க் காக்கின்றது!

எனவே,
ஓய்வூதியம் பெற்றிட
ஓயாமல் போராடியவர்களுக்கு,
ஓய்வூதிய தினத்தில்
ஓராயிரம் வாழ்த்துகள்!

இவண்
குஞ்சித. சுகுமார், குடந்தை.
9442903317.

---

2124.சிந்தனைச் சிந்தியல்
வெண்பா __நாற்பொருளாயிரம்
423/1000 _ இன்பம்_ பிரிவால்
இளைத்தல் _ 07.01.2023

வருநாளைக் கண்டு வருந்திடும் நெஞ்சம்
திருநாளும் இல்லாதிடமனமும் நோக
ஒருநாளும் போவதே ஊறு
சோ.மோகன் குடந்தை

---

## பொங்கல் வாழ்த்து!

புத்தொளிவீ சட்டும்!
புதுமை பூக்கட்டும்!
எத்திசையும் நற்செய்கை,
ஏற்றமுடன் ஓங்கட்டும்!
நற்றமிழர் பண்பாடு,
நம்பொங்கல்
போற்றுவோம்!
நற்றமிழர் பொங்கல்
நல் வாழ்த்து!
குடந்தை கு. செல்லதுரை.

---

2125.சிந்தனைச் சிந்தியல்
வெண்பா __நாற்பொருளாயிரம்
424/1000 _ இன்பம்_ பிரிவால் இளைத்தல்
_ 08.01.2023

சென்றவர் வந்திடும் செய்தியைக் கேட்காமல்
நின்ற நெடுமேனி நித்திரை விட்டொழித்தே
இன்றுவரை உண்ணா திருத்து
சோ.மோகன் குடந்தை

---

## புத்தாண்டு வாழ்த்து -2023

யாவரும் போற்றிட,
யானெனது நீக்கிட,

நாவன்மை இன்றிநின்
நற்செயல் - ஆவணமாய்,

நிற்கட்டும் மூவுலகில்,
நீங்காத புன்னகையால்

வெற்றிகாண புத்தாண்டு
வாழ்த்து.

குடந்தை கு. செல்லதுரை

---

2115.சிந்தனைச் சிந்தியல் வெண்பா
__நாற்பொருளாயிரம் 411/1000 _
பொருள்_படைபலம் 29.12.2022

போரிடா வெற்றிப் பழித்திடும் பின்னாளில்
பேரிடர் தந்து பெரும்பழி ஆக்கிடும்
சேரிடம் வல்லமை சேர்
சோ.மோகன் குடந்தை

---



## 2133.திருவள்ளுவர் தினம் 16.01.2023

முப்பாலில் மக்களுக்குத் தப்பாமல் நல்லறமும்;
கொப்பாய் பொருளின்பம் கூறியே __ஒப்புமையால்,
உள்ளமதைத் தூண்டி உணர்வுகள் ஒன்றவைத்த,
வள்ளுவரைப் போற்றும் வகைநாளில்__ துள்ளிவரும்,
கால்நடைக்குப் பொங்கலிடும் காட்சிப் பெருவுலகில்;
ஆல்போன்ற நற்றமிழர் ஆன்ற புகழின்று;
வாயார நன்னாளின் வாழ்த்து!
சோ.மோகன், குடந்தை

---

## 2076. மேன்மக்கள் சொல் கேள்

நேரிசை வெண்பா - 05.12.2022

பட்டறிவும் கற்றறிவும் பாங்குடை நன்னெறியும்
முட்டறிந்தோர் மேன்மக்கள் மோகமாய் __ வட்டமிட்டே
இட்டுரைக்கும் சொற்களைஏற்று வழிநடந்தால்
கிட்டும் உயர்வாழ்வு கேள்!
சோ.மோகன் குடந்தை

---

2142.சிந்தனைச் சிந்தியல்
வெண்பா __நாற்பொருளாயிரம்
450/1000 _ அறம்_ எதுவும்
நமக்கில்லை! _ 25.01.2023

காதல் மொழியதும் கன்றா வளமதும்
சாதல் வரும்போது சார்ந்துனை நாடாது
ஓதலொன்றே உன்னுடன் ஓய்ந்து!
சோ.மோகன் குடந்தை

## 2078.அறிவுப் பேராசான் அம்பேத்கர் நினைவு நாள் விழா–06.12.2022

நேரிசைக் கலி வெண்பா

அறிவாய்த் தமிழா அகவிழி தன்னைச்
செறிவாய்த் திறந்தும் செழிக்கும் - அறிவைத்
திறவாய் அயலவர் தந்திடும் துன்பம்
மறவாய் விழிப்புடன் நெஞ்சம் - திறவாய்!

குறைகண்டு நீயும் கொதித்தெழ மாற்றார்
கறைகண்டு நீக்கக் கடுமை - நிறைந்த
சிறைகண்டுச் சூழ்ச்சியின் சீற்றம் தணிந்த
நிறைகண்டு நேர்மையில் நேர்ந்த - மறையாய்ப்

பிறைகண்ட பேரின்பப் பீடினைப் போல
முறைவழுவா அம்பேத்கர் மக்கள் - நிறைவாய்
நெறிபிறழா இன்றுயர்வு நேர்ந்திடும் கல்வி
அறிவில் சிறந்திட ஆற்றும் - குறிப்பினைப்

பற்றிட மக்கள் படிப்பினைப் பெற்றிட
உற்றநம் தோழராய் ஓங்கிய - நற்றிறம்
பற்றிய பீமாராவ் பண்பரின் சொல்வழியில்
நற்றிறம் பற்றுவாய் நன்று

- சோ.மோகன் குடந்தை

## 2081. மோகத்தை முனி

நேரிசை வெண்பா

(ஆசையை விடு) _ 08.12.2022

அளவற்ற ஆசை அகத்துள் இருத்தி
உளைவுற்று வாழ்ந்தே உடலால்__ இளைத்தும்
ஒளியற்றுப் போதல் உயர்வோ? தெளிந்து
விளைவற்ற மோகம் விடு

சோ.மோகன் குடந்தை

## மகள்கள் தினம்!

மகளே!
உனைப் பார்கையிலே உலகம் சுருங்குகின்றது!
உன்னழகே மிளிர்கின்றது!
உன்னன்பே உயிர்ப்பிக்கின்றது!
உன்சிரிப்பே உயிரூட்டுகின்றது!
உன்பார்வையே உருகவைக்கின்றது!

நீயில்லா இல்லம் நீரில்லாக் குளமாம்!
நீயகலும் நாளை நினைத்தே ஏங்குகிறது
நீசேரும் உயிரை நிதமும் வேண்டுகிறது
நீயிருக்கும் நாளையே நிம்மதியாய் நினைக்கிறது!

அச்சத்தில் அலைந்தாலும்
எச்சத்தால் ஏளனப்பட்டாலும்
உச்சமாய் நம்பியிருப்பது
பச்சாதாபம் நிறைந்தயுனையே!

அப்பாயென்ற வார்த்தை
அம்மாயென்ற வார்த்தை
ஆயிரம் மின்சக்தியை
அடிவயிற்றில் பாய்ச்சுவது!

நீயில்லா உலகம் நீரில்லா உலகம்
நிம்தியில்லா உலகம் நினைவகற்றும் உலகம்

மகளிருக்கும் வீடே மகாலெட்சுமி வீடு
மகளிருக்கும் வீடே
மணம்வீசும் மலர்த்தோட்டம்
மகளிருக்கும் வீடே மனிதநேயமிக்க வீடு
மகளிருக்கும் வீடே மகிழ்ச்சியான வீடு!
இவண்

குஞ்சித. சுகுமார்

## 2077.சிந்தனைச் சிந்தியல் வெண்பா– நாற்பொருளாயிரம்

384/1000 _ இன்பம்_ ஐம்புலன் மகிழ்வு . 06.12.2022

நாசியினால், நாயகனை;
 நான்நுகர்ந்து தானறிந்து,
கூசிடா இன்பத்தில்;
 காசினியில் நான்மகிழ,
நேசிப்பை என்னுள்ளம்
 நேர்ந்து!

சோ.மோகன்
குடந்தை

## பாரதி

எட்டயபுரக் கவி எட்டாத கவியைப் பாட்டாளிக்கும் கிட்டிடச் செய்தாய்!
பட்டினியைப் பட்டினியாக்கிப் பாட்டெழுதிப் பெருமைப்பட்டாய்!

முறுக்கு மீசையில் இமயக் கவியைத் தூக்கி நிறுத்தினாய்!
முண்டாசுக் கட்டி மூர்க்கரையும் கவித்திறத்தால் மூக்குடைத்தாய்!

காந்திக்கு காத்துக் கிடக்காமல் கடற்கரையில் கவிபாடி மகிழ்ந்தாய்!
ஊர் ஊராய் சுற்றித் தமிழை உலகறிய செய்தாய்!

அன்று காசியில்லாமல் காசியிலும் தமிழ் வளர்த்தாய்!
நீ தான் தமிழுக்கு அக்கினி குஞ்சு!
தீ தெரியாமல், எவ்விடத்தும் இருப்பதுபோல்; நீயும் இருக்கிறாய்!
எங்கள் மனதில் பார'தீ'.

குடந்தை கு. செல்லதுரை